**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

நான் அவற்றிற்கு நிலைவாழ்வை அளிக்கிறேன். அவை என்றுமே அழியா. அவற்றை எனது கையிலிருந்து யாரும் பறித்துக்கொள்ள மாட்டார்.

(யோவான் 10:28)

இன்று நாம் நல்லாயன் ஞாயிறைக் கொண்டாடுகிறோம். மேலும் இன்று நாம் அனைத்து அன்னையர்களையும் மரியாதையோடு நினைவுகூர்ந்து நன்றிகூறும் அன்னையர் தினம். யோவான் 10:27 இல் “ என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிசாய்க்கின்றன. எனக்கு அவற்றைத் தெரியும். அவையும் என்னைப் பின் தொடர்கின்றன” என்று வாசிக்கிறோம்.

மூன்று வயதுக்குழந்தையின் தாய் நல்லாயனாகிய இயேசுவை உருவகப்படுத்துகிறது. தாயின் குழந்தை அவருடைய குரலைக் கேட்டு அவரைப் பின் தொடர்கிறது.

ரோபர்ட் பேரன் என்ற ஆயர் தம்முடைய இணையவழி ஒலிப்பரப்பபடும் மறையுரையில் நல்ல ஆயனைப் பற்றி விவரிக்கிறார். எழுத்துகள் நம்மை உறையவைத்துவிடும். ஆனால் குரல் நம்மை உருகவைத்துவிடும். தொடர்ந்து, **கிறிஸ்தவம் என்பது பல கருத்துகளின் தொகுப்பு அல்ல; மாறாக குரலுள்ள ஒருவரோடு நாம் கொண்டுள்ள உறவு.**

இயேசுவின் அந்த அழுத்தமான குரல் சீடர்களை ஈர்க்கிறது. அந்த அழைப்பு மறையுரை, ஆற்றுப்படுத்துதல், கண்டனங்கள் மற்றும் இறுதியில் தூதுரைக்கும் சீடத்துவத்திற்கு கட்டளையிடுகிறது. திருத்தூதர் பணிகள் 13 இல் பார்க்கும்போது, பவுலும் பர்னபாவும், யூதர்களிடையே துணிவோடு நற்செய்தியை அறிவித்தபோது, அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் கடவுள் கட்டளையிட்டவாறே பிற இனத்தாருக்கு அவர்கள் தூதுரைத்துக்கொண்டே செல்கின்றனர்.

ஆனாலும், அனைத்தையும் செய்யும் நல்லாயனின் குரல், வழிதவறிய ஆடுகளை மீட்கும் விலையாகத் தன்னுயிரையே தியாகம் செய்யும் சாந்த குணமுள்ள ஆட்டுக்குட்டியாக மாறுகிறது. அந்தத் தகுதியான ஆட்டுக்குட்டி, அரியனையில் வீற்றிருந்து, வாழ்வு அளிக்கும் தண்ணீரை தம் மந்தைக்கு அளிப்பவர். (திருவெ: 7:9, 14-17)

இன்று அனைத்து அன்னையர்களையும் நினைவுகூர்ந்து போற்றுகின்ற அதே வேளையில், நமது அருட்பணியாளர்களையும் நினைவுகூருவோம். ஏனென்றால் அவர்கள் அனைவரும். நல்லாயனாகிய நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் காணக்கூடிய மற்றும் வாழும் அடையாளம். காணாமல் போன ஆடுகளைத் தேடிச்சென்று குறிப்பாக, இந்த நேரத்தில் வழிதவறிப் போனப் பலரை மீண்டும் ஆட்டுக்கொட்டிலுக்கு கொண்டுவரும் அருட்பணியாளர்கள், எப்போதும் கடவுளின் இதயத்தில் இருக்கட்டும்.

திருப்பாடல் ஆசிரியர் பாடுவது, போல, நாமும் ஆண்டவரைப் புகழ்ந்து பாடுவோம். “நாம் அவர் மக்கள், அவர் மேய்க்கும் ஆடுகள்; ஆண்டவரே கடவுள் என்று உணருங்கள், அனைத்துலகோரே ஆண்டவரை ஆர்ப்பரித்து வாழ்த்துங்கள்! (திருப்பாடல் 100)

**இன்றைய வாசகங்கள்:**

திப: 13: 14, 43-52;
திபா: 100: 2,.3, 5;
திவெ: 7: 9,14-17;
யோவான்: 10: 27-30.

INTERNAL CIRCULATION ONLY
BUL 19/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

8 மே 2022

Newbec
NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறு

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது**



மாதாந்திர கருப்பொருள்:
**அகில உலக குடும்ப தினம் (மே 15)**

# என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிசாய்க்கின்றன.

மூன்று வயது குழந்தை தனியாக வீட்டின் முன்னறையில் விளையாடிக்கொண்டிருக்கிறது. சிறிது நேரத்திற்குப்பின் தன் தாய் தன்னை அழைப்பதைக் கேட்ட அக்குழந்தை, தான் விளையாடிக்கொண்டிருந்த விளையாட்டுப்பொருட்களை அப்படியே விட்டு விட்டு, பழக்கமான தன் தாயின் குரலைத் தேடிக்கொண்டு அவரை நோக்கி ஓடியது. ஓடியபின் தன்னுடைய சின்னஞ்சிறிய பிஞ்சுக்கைகளால் தன் தாயின் காலை இறுக்கமாகக் கட்டிக்கொண்டது.